# சங்ககால மகளிர் மற்றும் மறப்பெண்கள்

*முனைவர் இரா. உமாதேவி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
திருநெல்வேலி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5201

***ஆய்வுச்சுருக்கம்***

*சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். ஐந்திணையை அடிப்படையாகக் கொண்டு அக்கால மக்கள் வாழ்க்கையின் மாண்பினை விளக்குகின்றன. பண்டைத் தமிழர் வீரம், கொடை, ஆட்சிமுறை, அரசர் – புலவர் நட்பு முதலான நிலைத்த விழுமியங்களைக் கொண்ட கலைக் களஞ்சியமாகும். மக்கள் பெயர் சுட்டியும், சுட்டாமலும் அமையும் இவ்விலக்கியம் மானுடம் போற்றும் மாட்சியுடையதாகும். அந்தவகையில் இக்கட்டுரை சங்ககால மகளிர் மற்றும் மறப்பெண்களைப் பற்றி ஆய்வதாக அமைந்துள்ளது.*

## முன்னுரை

மகளிர் மகத்தான ஆற்றல் படைத்த பெண் தெய்வம். மனையறத்தின் ஆணிவேராக பெண் அன்றிலிருந்து இன்றுவரை கருதப்படுகிறாள். இதனையே வள்ளுவரும் “பெண்ணிற் பெருந்தக்க யாவுள” என மெச்சுகிறார். பெண்களுக்கான போராட்டம் மார்ச் 8 என்பதை, 19ஆம் நூற்றாண்டில் துவங்கப்பட்டதாகப் பேசி, அன்றைய தினத்தை மகளிர் தினமாக கொண்டாடி வருகிறோம். ஆனால் மகளிரின் வீரம் சங்ககாலத்திலேயே கருக்கொண்ட ஒன்றாகும்.

சங்க இலக்கிய காலகட்டத்தில் 1446 புலவர்கள் இருந்திருக்கிறார்கள். அதில் பெண்பாற் புலவர்கள் 32 பேர் ஆவர். ஆண்பாற் புலவர்களுக்கு இணையான இலக்கிய ஆளுமையுடனும், வீரத்துடனும், தீரத்துடனும் பாடல்களை எழுதியுள்ளனர் இப்புலவர் பெருமக்கள். இங்ஙனம் சாதித்த சங்கப்பெண்களின் வீரம் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சங்க இலக்கியம் - புறநானூறு

புறம் நான்கு நூறு - புறநானூறு, நானூறு பாடல்களைத் தன்னகத்தே கொண்டது. ஈரத்தையும், வீரத்தையும் ஒருங்கே அமைத்து கொண்ட புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக அமைந்துள்ளது. புறப்பாடல்களைப் பாடுவது, புறத்தை மையமிட்ட வீரம், கொடை, கல்வியைப் புனைந்தது புறம் என்பதாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியலைப் பற்றி பேசி நிற்பது புறநானூறு. அரசியல், கல்வி, அறம், அறிவியலை உரைத்தல், சங்ககால மன்னர்கள், புலவர்கள், சங்ககால மக்கள் ஆகியோர் தம் உயர்ந்த பண்பாடுகளை உரைப்பது புறநானூறாகும். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்சுசு என்னும் அறத்தைக் கொண்டது. மானம் மிக்க வீரத்துடனும், ஈரத்துடனும் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர் பெருமக்களை பெருமைப் படுத்திய நூலே புறநானூறு ஆகும்.

## புறநானூற்றில் பெண்கள்

உலகப் படைப்புகளில் உன்னதப் படைப்பே பெண்ணே ஆகும். இதனையே கவிமணியும் "மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திடவேண்டும்மா" எனப் பாடினார். உலக உயிர்களை உண்டாக்கு வதும், காப்பதும், உயிர்ப்பிப்பதும் பெண்ணே ஆவாள். அன்பு, ஆதரவு, பகிர்வு இம்மூன்றுக்கும் பொருத்தமானவளே பெண். இத்தகு மேன்மை பொருந்திய பெண்களின் வீரம் குறித்து பேசுகின்றது.

புறநானூற்றில் மறத்தாய் குறித்த பாடல்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. பெண்ணின் கடமைகளுள் ஒன்றாக வீரமிக்க ஆண்மக்களை பெற்றுவளர்த்தது ஆளாக்குவது எனப் புலவர் பொன்முடியார் பாடுகின்றார். இதனை,

**"ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"**
**(புறம்.312)**

என்ற பாடலின் மூலம், நன்மகனைப் பெற்றுப் பேணி பாதுகாப்பது ஒரு மறத்தாயின் கடமையென்றும், உறுதியுடன் பாடியுள்ளார் புலவர். பழந்தமிழர்களில் மறத்தாய் நாட்டைக் காக்கத் தந்தையைப் போர்க்களத்திற்கு அனுப்பி வைக்கிறாள். தந்தை வீரமரணம் அடைந்தான் என்பதை அறிந்த பின்பும், போர்க்களத்தில் கணவனை அனுப்பியும், அவனும் இறந்து பட்டான் என்பதை அறிந்தும் அவள் கலங்கவில்லை. மறுநாளும் போர்ப்பறை ஒலிக்கும் சத்தம் கேட்டும் தன் ஒரே மகனை இளங்குழந்தை என்றும் பாராமல் அவன் கையில் வேலைக் கொடுத்து போர்க்களம் அனுப்பி வைக்கிறாள் தாய் என்று ஒக்கூர் மாசாத்தியார் பாடுகின்றார். இவ்விதமாக மறத்தாயின் மாண்பினைப் புறநானூற்று பாடலின்வழி புலவர்கள் பாடுகின்றனர். இதனை,

**"யானை எறிந்து, களத்து ஒழிந்தன்னே**
**நெருநல் உற்ற செரவிற்கு இவள் கொழுநன்**
**பெருநிரை விலங்கி, ஆண்டுப் பட்டனனே**
**இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று, மயங்கி**
**வேல்கைக் கொடுத்து, வெரிதுவிரித்து உடீஇ**
**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒரு மகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்களன விடுமே"**
**(புறம். 279. 4-11)**

என்ற பாடலின் வழி தாயின் வீரத்தைப் போற்றிப் பாடுவதை அறியமுடிகின்றது. இதனைத் தொடர்ந்து காவற்பெண்டு என்னும் பெண்பாற் புலவர் வீரத்தாயின் பண்பினை இவ்விதமாகப் பாடியுள்ளார். இதனை,

**"சிற்றில் நல்தூண் பற்றி, நின்மகன்**
**யாண்டுஉள னோஎன வினவுதி என்மகன்**
**யாண்டுஉளன் ஆயினும் அறியேன், ஒரும்**
**புலிசேர்ந்து போகிய கல்அளை போல**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன மாதோ போர்க்களத் தானே"**
**(புறம். 86)**

தன் மகன் எப்படிப்பட்ட வீரன் என்பதை, ஒருநாளில் எட்டுத்தேரினைச் செய்யும் தச்சன் ஒரு திங்கள் முழுவதும் அரிது முயன்று செய்த சக்கரத்தைப் போன்றவன் எனப் பாடுகின்றாள். மற்றொரு தாயோ, தன் வயிற்றினைப் புலிக்குகைக்கு ஒப்பாகப் பேசி மகனின் வீரத்தை புகழ்ந்து பேசுகின்றாள்.

மற்றொரு பாடலில், போரில் தன் மகன் புறங்காட்டியது ஓடிப்போன செய்தி உண்மையானால் அவனுக்குப் பாலூட்டிய மார்பினை அறுத்து விடுவேன் என்று சூளுரைக்கிறாள். அதோடு நின்றுவிடாமல் போர்க்களம் சென்று மரணமுற்று கிடக்கு வீரர்களை புரட்டிப் புரட்டிப் பார்த்து தன் மகனைத் தேடுகிறாள். மகனைப் பிணமாகக் கண்டதும், பொங்கி வரும் அழுகையை அடக்கிக் கொண்டு கண்ணீர் சிந்தாமல், சிலர் சொன்னதுபோல அல்லாமல் தன் மகன் மார்பில் விழுப்புண் பட்டு இறந்து கிடப்பதைப் பார்த்து உவகைக் கொள்கிறாள். மகனை மார்பில் கட்டித்தழுவிக் கொள்கிறாள் என்பதை அறியும் போது என்னே ஒரு வீர உணர்வு என்று புகழப்படுகின்றது. இதனை,

> **“ ..................... உண்ட என்**
> **முலை அறுத்திடுவேன் யான்எனச் சினைஇ**
> **கொண்ட வாளோடு படுபிணம் பெயரா”**
> ***(புறம்.278.4-6)***

என்ற பாடலின்வழி காக்கைப்பாடினியார், தாயின் வீரத்தையும், அந்த வீரத்தின் உணர்வினையும் பாடியுள்ளார். இதனைப் போன்று, மற்றோரு புறத்தாய் யானையை எதிர்த்துப் போரிட்டு இறந்தான் என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி கொண்டாள். கண்ணீர்த்துளிகளை மகிழ்வுடன் வடிக்கின்றாள் எனப் பாடுகின்றார். இங்ஙனம் போரைக் கண்டு அஞ்சாதப் பெண்களாகவே நம் சங்கப் பெண்கள் இருந்துள்ளனர் என்பதைப் புலவர்களின் பல பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

### சமய வழிபாடும் மகளிரும்

பொதுமன்றங்களில் நடைபெறும் சமயச் சடங்குகள், விழாக்களிலும் தெய்வ வழிபாடு களிலும் மகளிர் பெரும் பங்கு வகித்தனர். வழிபாடு நிகழும் இடங்களை மலர்களால் அலங்கரிக்கவும் அம்பலங்களை மெழுகித் தூய்மையாக்கவும் மாலைப்பொழுதில் விளக்குகள் ஏற்றிக் கடவுளர் உறையும் தறிகளுக்கு மலர் சூட்டவும் அரசனால் சிறைப்படுத்திக் கொண்டு வரப்பட்ட மகளிர் நியமிக்கப்பட்டிருந்ததை சங்க இலக்கிய பட்டினப்பாலை எடுத்துக்காட்டுகின்றது. இதனை,

> **“கொண்டி மகளிர் உள்துறை மூழ்கி**
> **அந்தி மாட்டிய நந்தா விளக்கின்**
> **மலர் அணிமெழுக்கம் ஏறிப்பலர் தொழ”**
> ***(பட்டினப்.246-248)***

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. மாலை நேரத்தில் இல்லுறை தெய்வத்தை மலர்தூவி மகளிர் வழிப்பட்டதை இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரக் கொளீஇ நெல்லும் மலரும் தூஉய்க் கை தொழுது (நெடுநல்.42-43) என்று நெடுநல்வாடை குறிக்கின்றது. குடும்பத்த் தலைவியர் தமது கணவன் பிள்ளைகளுடன் பூவும் புகையும் கொண்டு பௌத்தப் பள்ளிக்குச் சென்றதை மதுரைக் காஞ்சி கூறும். மேலும், போர்க்கடவுள் கொற்றவையும் கற்புக்கடவுள் கண்ணகியும் அக்காலத்தில் வழிபட்ட பெண் தெய்வங்களாக இருந்துள்ளதை அறியமுடிகின்றது.

### அரசியலும் மகளிரும்

சங்ககாலத்தில் மகளிர் ஆட்சிசெய்ததாக அமைச்சராக இருந்ததாக படைத் துறைகளில்பங்கேற்றதாகக்குறிப்புஇல்லை. ஆனால், புலன் திறன் மிக்கவர்களாக இருந்துள்ளதை அறியமுடிகின்றது.

பூதப்பாண்டியன் மனைவி பெருங் கோப்பெண்டு என்பவளிடம் கவிபாடும் திறமையும், அரசியலறிவும் இருந்தும் கணவனை இழந்து கைம்மைக் கொடுமைக்கு அஞ்சி அரசியல் பொறுப்பை ஏற்க மறுத்ததைப் புறநானூற்றுப் பாடல்வரி உணர்த்துகின்றது. இதனை,

> **“பல்சான் றீரே! பல்சான் றீரே!**
> **செல்களனச் சொல்லாது ஒழிகென விலக்கும்**
> **பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே**

**அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடைஇடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெண்எள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி ஆக,
பரற்பெய் பள்ளிப் பாய்இன்று வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்குஅரி தாகுகதில்ல, எமக்குஎம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்புஅற
வள்இதழ் அவிழ்ந்த தாமரை
நள்இரும் பொய்கையும் தீயும்ஓ ரற்றே”**

**(புறம்.246)**

என்ற பாடல் உணர்த்துகின்றது. மேலும், ஔவையார் அதியமானுக்காகத் தொண்டைமான் இளந்திரையனிடம் தூது சென்று இருவருக்கும் இடையே நடக்க இருந்த போரைத் தடுத்தார். அதியமான் நெடுநாள் வாழ்வளிக்கும் நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் ஔவையாருக்கு அளித்து, தமிழக வரலாற்றில் அழியாப் புகழைப் பெற்றான் என்று இலக்கியங்களின் வழி சங்க கால மகளிர் நிலை எவ்வாறிருந்தது என்பதை அறியமுடிகின்றது.

### மகளிரும் மக்கட்பேறும்

திருமண வாழ்வின் முதன்மையாகக் கருதப்பெறுவது மக்கட்பேறு என்பதாகும். ஒரு பெண் தாய்மையில் தான் முழுமையுறுகிறாள் என்பது மரபு வழிச் சிந்தனையாகும். இம்மைப் புகழும் மறுமை இன்பமும் குழந்தையால் மட்டுமே கிட்டு' என மக்கள் நம்புவதை அகநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இதனை,

**“இம்மை உலகத்து இசையோடு விளங்கி
மறுமை உலகமும் மறுவின்றி எய்தும்
செறுநரும் விழையும் செயிர் தீர்க்கட்சி
சிறுவர்ப் பயந்த செம்மலோர்”**

**(அகம். 66.1-4)**

என்ற பாடலடிகளில் இக்கருத்தை அரண் செய்வதாகப் பாண்டியன் அறிவுடை நம்பியின்,

**“மயக்குறு மக்களை இல்லோர்க்கு
பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே”**

**(புறம்.188.6-7)**

என்னும் பாடல் அமைகின்றது. சங்கச் சமுதாய அமைப்பில் பெண் மகவை வரவேற்று அதற்காகப் பெற்றோர் தவமிருப்பதை, புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து அவ்வரித் - திதலை அல்குல் முது பெண்டாகி (புறம்.370.5-6) எனச் சுட்டும் பொன்முடியார். ஒரு மனைவியின் தலையான கடமை ஈன்று புறந்தருதல் என்கிறார். (புறம்.312.1) அரிசில் கிழார் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை வீறுசால் புதல்வன் பெற்றவனை (பதிற்றுப்பத்து.74.21) எனச் சிறப்பிக்கின்றார்.

### நிறைவாக

சங்ககாலத்தில் பெண் என்பவள் ஆண்களுக்கு நிகராகக் கல்விப் புலமையிலும் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும் சமுதாயப் பிரச்சனைகளில் தீர்வு காண்பதிலும் சிறப்பாக செயல்பட்டுள்ள நிலையை பெண்பாற் புலவர்களின் பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது. பெண்பாற் புலவர்களின் பெண்மொழியானது அக்காலப் பெண்களின் மனஉணர்வுகளை வெளி ப்படுத்தும் தன்மையில் உள்ளதை அறியமுடிகின்றது. பெண் என்றால் வீரம் எனப் புறத்தாய் மூலமாக அறிய முடிகின்றது. சங்ககால மகளிர் வீரமுடைய பெண்மணியாகவும், புலியைப் புறமுதுகிட்டு ஓடச் செய்பவளாகவும், கல்வியறிவும், கலை ஞானமும் நிரம்பியவர்களாகத் திகழ்ந்துள்ளதை தெள்ளத் தெளிவாக அறியமுடிகின்றது.

### துணைநூற்பட்டியல்

1. சங்கஇலக்கியம் மூலம் முழுவதும் - ச.வே.சுப்பிரமணியன் - மணிவாசகர் பதிப்பகம். சென்னை, முதற்பதிப்பு 2010.
2. சங்க இலக்கியம் புறநானூறு - நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு 2004.